








கொஞ்ச காலம் முன்பு திண்ணையில் ஒரு மகாராஜா கதை சொன்னேன். நினைவில்லாதவர்களுக்காக நான் திரும்பச் சொல்லப்போவதில்லை. தமிழ்நாடு அரசே அதைத் திரும்ப எல்லாருக்கும் நினைவுபடுத்துகிறது.

இன்னொரு முறை பஸ் கட்டணத்தை உயர்த்தப்போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இதுபற்றி மாண்பு மிகு பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை, ஆட்சேபங்களை (ஏதேனும் இருந்தால்!) அரசுக்கு இந்த மாதக் கடைசிக்குள் அனுப்பி வைக்கக் கோரி கெசட் அறிவிப்பும் தந்துவிட்டது. இதெல்லாம் சும்மா ஒரு ஃபார்மாலிடிக்குத்தான். ஏறுகிற கட்டணம் ஏறத்தான் போகிறது. சில சட்ட ரீதியான நடைமுறைகளை நிறைவேற்றித் தொலைக்கிற வேலை இது.

ஆனால் என் கேள்வியே வேறு. கெசட் அறிவிப்பு பற்றி பஸ் பயணிகளில் நூற்றுக்கு ஒரு ஆளுக்குக்கூடத் தெரிந்திருக்கிற வாய்ப்பு கிடையாது. தெரிந்துதான் என்ன செய்யப்போகிறோம் என்று விரக்தி மனப்பான்மை தான் எல்லாருக்கும் இருக்கிறது.

என்னென்னவோ செய்யலாம், ஆனால் செய்கிற மனப்பான்மை நம் மாண்புமிகு பொதுமக்களுக்கு இல்லை. இத்தனைக்கும் பஸ் கட்டண உயர்வு பாதிக்காத பிரிவினர் சமூகத்தில் மிகவும் குறைவு. சில்லறை வியாபாரங்களில் ஈடுபடும் அன்றாடங்காய்ச்சிகள் முதல் நடுத்தர வகுப்பு வெள்ளைச்சட்டை வேலக்காரர்கள் வரை எல்லாரும் இதில் பாதிக்கப்படுகிறார்கள்.

பஸ் கட்டண உயர்வுக்கு நியாயங்கள் உண்டு என்று நிரூபிக்க அரசு முயற்சிக்கிறது. பல்லவன் பஸ்களுக்குத் தேவையான டீசல் விலை ஏறிவிட்டதுதான், திரும்பத் திரும்பப் பாடப்படுகிற பல்லவி. ஆனால் பல்லவன் பஸ்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை வாங்குவதில் நடைபெறுகிற ஊழல்கள், பல்லவன் தனக்குச் சொந்தமாகவே பாடிகட்டும் தொழிற்சாலை வைத்துள்ளபோதும், தனியார் நிறுவனங்களிடம் பல்வேறு பொருட்களை வாங்க ஒப்பந்தங்கள் செய்திருப்பதால் அதிகாரிகளுக்குக் கிடைக்கிற லாபங்கள் இவற்றைப்பற்றியெல்லாம் யாரும் பேசமாட்டார்கள்.

மக்கள் கருத்தை உருவாக்குகிற வேலையில் பத்திரிகைகள் ஈடுபடுகின்றன. இந்தப் பத்திரிகைகளின் கருத்துக்களை யார் உருவாக்குகிறார்கள் என்று கேள்விக்கு பதிலைத் தேடினால் பஸ் கட்டணப் பிரச்னையிலிருந்து மண்ணெண்ணெய் பிரச்னை வரை அரசின் பார்வை மட்டுமே வெளியாகிற மர்மங்கள் புரியும்.

பத்திரிகைகள் இப்பிரச்னையில் தீவிரம் காட்டாத காரணங்கள் (நிருபர்களுக்கு இலவச பஸ் பாஸ், பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் இத்யாதி) புரிகின்றன.

ஆனால் அரசு ஊழியர்களின் அங்கங்கள் எல்லாம் என்ன பண்ணிக் கொண்டிருக்கின்றன? தங்கள் போராட்டங்களுக்கு விளம்பரம் கிடைப்பதாய் இருந்தால் மட்டுமே போராடுவது என்கிற மனப்பான்மைதான் இப்படி ஒதுங்கி நிற்பதற்குக் காரணமா? எதிர்க்கட்சிகளுக்கு எரிசாராயம் முக்கியமாகப்படுகிற அளவுக்கு ஏழைகளை நேரடியாகப் பாதிக்கிற இந்தப்பிரச்னை உறுத்தவில்லை.

நம் இந்திய மரபுச்சொத்தான விரக்தி மனப்பான்மையில் நானும் ஆழ்ந்துபோய் திண்ணையில் இதை அங்கலாய்ப்பதோடு ஓய்ந்து விடுகிறேனோ என்று பயமாக இருக்கிறது. இப்போதும்கூட தனி நபர்கள் என்கிற முறையிலாவது நம் எதிர்ப்பை எப்படிக் காட்டலாம் என்பது பற்றி எனக்கு சில யோசனைகள் இருக்கின்றன. உங்களுக்கும் இருந்தால் உடனே சொல்ல வேண்டாம்; செய்யுங்கள். அப்புறம் எனக்கும் சொல்லுங்கள்.

திண்ணைப் பேச்சால் என்ன லாபம் என்று ஒரு (திண்ணை) நண்பர் கேட்டார். இந்தப் பேச்சு பல இடங்களில் எதிரொலிப்பதாகத் தகவல் வந்தது. உதாரணமாக அடையாறு திரைப்படக் கல்லூரி. வழக்கமாக நம்மூரில் நடப்பதுபோல, பேசப்பட்ட பிரச்னைக்குத் தீர்வு காண்பதை விட்டுவிட்டு, இதைப்பற்றி திண்ணையில் போய் சொன்னது யாராயிருக்கும் என்ற ஆராய்ச்சிதான் நடக்கிறது.

இப்போது சொல்லப்போவதைப் பற்றியும் மேற்கண்ட மாதிரியிலேயே ஆராய்ச்சி நடக்கும்.

தமிழ்நாடு அரசின் செய்திப்படங்களின் சிறப்பம்சங்கள் நமக்குத் தெரிந்தவைதான், இந்தச் செய்திப்படங்களைத் தயாரிப்பதற்கென்றே உள்ள செய்திப் படப்பிரிவுக்கும் திரைப்படக் கல்லூரிக்கும் சேர்த்து ஒரே தலைவர் தான். பல எம்.ஜி.ஆர். படங்களை இயக்கிய ப.நீலகண்டன் தான் தலைவர். எம்.ஜி.ஆர். இன்னும்கூட செய்திப் படங்களில் நடித்து வருவது போல, ப.நீ.யும் இன்னும் இயக்குநராக இருக்கிறார். வெளியிலிருந்து யாராவது தயாரிப்பாளர் அவரைக் கூப்பிட்டு படத்தை இயக்கச் சொல்வது பற்றி எனக்கு அக்கறையில்லை. அரசுச் செய்திப் படங்களில் நீதிகளை கதை வடிவில் சொல்ல சில படங்கள் எடுக்கிறார்கள். இதை இயக்கவும் இத்துறைத் தலைவர் தான் வரவேண்டுமா?

ஏற்கனவே இவர் இயக்கி 15 லட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட முப்பது நிமிடப் படமான 'குமரிக் கண்டம்' சிரிப்பாய் சிரிக்கிறது.

இந்தப் படத்தில் குமரிக் கண்டத்தில்தான் உலகின் முதல் மனிதர்கள் தோன்றியதாகச் சொல்கிறார்கள். (வேறு யார், தமிழன் தான்!) இங்கிருந்து பிற பகுதிகளுக்குச் சென்று இவர்களால் உலகில் மனித குணம் வளர்ந்ததாகவும் சொல்கிறார்கள். அதாவது திராவிடன் ஆரியன் வெவ்வேறு இல்லை. திராவிடனே வேறு ஊருக்குப் போய் ஆரியனாகத் திரும்ப வந்தானா? குழப்பமாய் இருக்கிறது. சரி, போகட்டும். 'வடிம்பலம்ப நின்ற நெடியோன்' என்றொரு மன்னனைக் காட்டுகிறார்கள். இவன் முன்னிலையில் கடற்கரையில் ஒரு நாட்டியம் நடக்கிறது.

இந்த நாட்டியத்தைப் பார்த்தால் நீதிபதி மகராஜன் நிச்சயம் சந்தோஷப்படுவார். ஏனென்றால் பரத நாட்டியம் மட்டுமல்ல, காபரே, ஷேக். ட்விஸ்ட், ரிகார்ட் டான்ஸ், ஜெயமாலினி ஜோதிலட்சுமி பாணி நடனம், என்று எல்லா வகை நடனங்களுமே முதலில் தமிழ் மண்ணில் தான் உதித்தன என்று இந்த நடனத்தின் வாயிலாக ப.நீ. நிரூபித்திருக்கிறார்.

இப்படியொரு படத்தைப் பதினைந்து லட்சம் செலவில் தயாரித்தது, முதல் அபத்தம். இந்த முப்பது நிமிடப் படத்துக்குச் சென்னை கலைவாணர் அரங்கில் தனியே ஒண்ணரை ரூபாய் கட்டணம் விதித்திருப்பது இரண்டாவது குற்றம்.

மூன்றாம் நான்காம் முப்பதாம் குற்றங்கள் செய்தித் துறையின் நீதி போதிக்கும் கதைப்படத்தை இதே இயக்குநரிடம் தந்திருப்பது. அடையாறு திரைப்படக் கல்லூரியில் டைரக்ஷன் படித்துவிட்டு வெளியே போகும் மாணவர்கள் பலர் வாய்ப்பு கிடைக்காமல் ஜீவனத்துக்கே அல்லாடுகிறார்கள். ஏன் அவர்களை அழைத்துச் செய்திக் கதைப் படங்களை இயக்கச் சொல்லாமல், எம்.ஜி.ஆரின் இயக்குநரையே அதற்கு அழைக்க வேண்டும்? அந்த மாணவர்களின் திறமையில் நம்பிக்கை இல்லையென்றால் அவர்களைப் பயிற்றுவித்து அனுப்பினது இதே அரசின் கல்லூரி தானே? அதற்குத் தலைவரும் இதே எம்.ஜி.ஆரின் இயக்குநர் தானே!

கேள்விகள்! கேள்விகள்!

விசிட்டர் லென்ஸ்
**25-03-1981**